## O.S. No.12/2023

03.09.2025

**வா.சா.1**

**திரு மோகன்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (4, 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

என்னுடைய தாத்தா வெங்கடகிருஷ்ணன். அவரது அப்பா வெங்கடேச அய்யார் என்றால் சரி. அவரது புனை பெயர் வைத்தியம் வெங்கடேச அய்யர் என்றால் ஆமாம். 29.07.1954 தேதியிட்ட பாக பத்திரத்தில் வைத்தியம் வெங்கடேச அய்யருக்கு ஒதுக்கப்பட்ட A ஷெட்யூல் சொத்துக்கள் தாவா சொத்துக்கள் என்றால் சரி. வைத்தியம்வெங்கடேச அய்யருக்கு ஒரே மகன், 2 பெண்கள் என்றால் சரி. அவர்கள் அவையாம்பாள், கமலாம்பாள் ஆவார்கள். அந்த பாக பத்திரத்தில் அந்த பெண்களை காட்டப்படவில்லை என்றால் சரி. 15.01.1973 ல் வெங்கடேச அய்யர் உயில் வைத்ததாக வழக்கில் முன்னிலைப்படுத்தியுள்ளேன். அந்த அசல் ஆவணம்தான் வா.சா.ஆ.2 ஆகும். எங்கள் குடும்பம் சாஸ்திர சம்பிரதாயங்களை கடைபிடிக்க கூடிய ஆச்சாரமான குடும்பம்

என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் வெங்கடேச அய்யர் இறப்பிற்கு பின்னிட்டு செய்யக்கூடிய சாஸ்திர சம்பிரதாயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 யை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.2 இதற்கு முன்பாக வெளியுலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் பற்றி குறிப்புரை ஏதும் இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.2 இந்த வழக்கிற்காக சில நாட்களுக்கு முன்பு பழைய தாள்களில் தயாரிக்கப்பட்டது என்றால் தவறு. வெங்கடேச அய்யர், வெங்கலெட்சுமி, டாக்டர் வெங்கடகிருஷ்ணன் ஆகிய மூவரும் விபரம் தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்தில் 1954 ம் ஆண்டே சொத்துக்களை பொறுத்து பதிவு பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரி. 1973 ல் எழுதப்பட்ட வா.சா.ஆ.2 ஆனது எதனால் பதிவு செய்யப்படவில்லை என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உண்மையாக அந்த தேதியில் ஏற்படாததால்தான் பதிவு செய்யப்படவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.2 எனக்கு 2017 ல்தான் தெரியவந்தது. வா.சா.ஆ.2 யை என் பாட்டி ராஜலெட்சுமி என்னிடம் ஒப்படைத்தார். வா.சா.ஆ.2 யை வேறு எந்த நீதிமன்றத்திலோ எந்த வழக்கிலோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. ராஜலெட்சுமி 2018 ல் இறந்து விட்டார். உயிலை முன்னிலை படுத்த வேண்டும் என்பதற்காக பொய்யான தகவலை

கூறுகிறேன் என்றால் தவறு. வா.சா.ஆ.2 ல் யார் சாட்சிகளாக உள்ளார்கள், யார் எழுதியது என்ற விபரம் தெரியுமா என்றால் உயிலை பார்த்தேன், தெரிந்து கொண்டேன். அவர்கள் யாரும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. நான் M.C.A. பட்டதாரி. உயில் சாட்சிகள் யாரும் தெரியாது எனவும் முன்னெச்சரிக்கையான பதில் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. வெங்கடேச அய்யர் 1973 ம் ஆண்டு 10 வது மாதம் காலமாகி விட்டார். வா.சா.ஆ.6 வெங்கலெட்சுமி அம்மாள் 01.07.1977 ல் எழுதி வைக்கப்பட்ட உயில் என்றால் சரி. வா.சா.ஆ.6 எழுதிய காலத்தில் என் பாட்டி வெங்கலெட்சுமி சாஸ்திர சம்பிரதாயங்களை கடைபிடிக்கும் நபராக இருந்தாரா என எனக்கு தெரியாது. சாஸ்திர சம்பிரதாயங்களை கடைபிடிக்கும் பெண்கள் சொத்துக்கள் பற்றி எழுதும்போது கணவருக்கு காரியங்கள் செய்தவர்களே எனக்கும் செய்ய வேண்டும் என குறிப்பிடும் வழக்கம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.6 ஏற்பட்ட காலங்களில் சொத்தை விட சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பமாக எங்கள் குடும்பம் இருந்தது என்றால் தவறு. வா.சா.ஆ.6 பழைய தாள்களில் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக பின்னொரு தேதியில் தயாரிக்கப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.6 யை எழுதியவர் யாரென்பதை படித்து தெரிந்து கொண்டேன். ஆனால்,

தற்சமயம் ஞாபகமில்லை. வா.சா.ஆ.6 ல் சாட்சி கையெழுத்திட்டவர்கள் யாரென்றால் ஒரு சாட்சி நடராஜன் மற்றொரு சாட்சி சந்தானகிருஷ்ணன் ஆவார்கள். மேற்படி இருவரும் தற்போது உயிருடன்தான் இருக்கிறார்கள். அவர்களை விசாரிக்கலாம். சாட்சி சந்தானகிருண்ணனுக்கு வயது என்ன இருக்கும் என்று எனக்கு தெரியாது. மற்றொரு சாட்சியான நடராஜனுக்கும் என்ன வயது இருக்கும் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆனது 2017 ம் ஆண்டுதான் பாட்டி என்னிடம் ஒப்படைத்தார். அதன் மூலம் தெரிந்து கொண்டேன். சாதாரணமாக 1977 ம் ஆண்டு காலகட்டத்தில் பெண்களுக்கு பூர்வீக சொத்துரிமை எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. பெண்களுக்கு சொத்துக்கள் கொடுக்க வேண்டும் என்றால் தான செட்டில்மெண்ட் மூலமாக கொடுக்கும் பழக்கம்தான் நடைமுறையில் இருந்துவந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இது எதையும் சிந்திக்காமல் அவசர கதியில் வழக்கு போட வேண்டும் என்ற எண்ணத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் தவறு. என் தகப்பனார் பெயர் சத்தியநாராயணன் என்றால் சரி. என் தகப்பனார் பொது வாழ்க்கையில் செல்வாக்குடையவர் என்றால் எளிமையானவர், அமைதியானவர். என் தந்தையார் பொது வாழ்க்கையில் உள்ளவர். அவருக்கு Secretariate முதல் வருவாய் துறை அலுவலகங்கள்

வரை செல்வாக்கு உண்டா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு என் தந்தையார்தான் உந்து சக்தியாக இருந்தார் என்றால் சரி. வா.சா.ஆ.6 தை எழுதியவர் கொலப்பாடு கலியமூர்த்தி என கண்டுள்ளது. அவர் எழுதிய ஆவணங்கள் நீதிமன்றங்களால் செல்லாது என சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எந்த வழக்கிலும் வா.சா.ஆ.6 யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 383/1981 ல் எங்கள் குடும்ப உறுப்பினர் லலிதாவிற்காக என் தாத்தா வெங்கடகிருஷ்ணன் 3 ம் நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் 4, 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை மூலம் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.2 ஆவணமாக 01.07.1977 தேதியில் வெங்கலெட்சுமி எழுதி வைத்ததாக சொல்லும் ஒரு உயில் ஆவணம் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளது. 01.07.1977 அன்று எத்தனை உயிலை வெங்கலெட்சுமி எழுதினார் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அ.வ.எண் 383/1981 ஆவணம் வா.சா.ஆ.20 என்றால் சரிதான். 01.07.1977 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆவண பட்டியலில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண் 383/1981 வழக்கில் வா.சா.ஆ.2 உயிலும் இந்த

வழக்கில் நான் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.ஆ.6 ஆவணமும் ஒன்றுதான் என்றால் சரி. வா.சா.ஆ.6 முந்தைய வழக்கில் தாக்கல் செய்ததற்கான குறிப்புரை எதுவும் காணப்படவில்லை என்றால் சரி. அ.வ.எண் 383/1981 ல் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 ஆவணமும் வெவ்வேறு காலகட்டங்களில் எனக்கேற்றவாறு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் தவறு. என்னுடைய பிறந்த தேதி 08.12.2001 ஆகும். 4, 5 பிரதிவாதிகளின் தந்தையார் பெயர் குணசேகரன் என்றால் சரி. அ.வ.எண் 383/1981 வழக்கை தாக்கல் செய்தவர் யாரென்றால் என் தாத்தா வெங்கடகிருஷ்ணன். அந்த வழக்கு லலிதாவின் Power Agent என்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு சமரச முறையில் முடிவுக்கு வந்தது. அந்த வழக்கின் 2 ம் பிரதிவாதியான குணசேகரனுக்கு புல எண் 183/1 ல் உள்ள 10 சென்ட் விற்கப்பட்டுவிட்டதாகவும் புல எண் 182/1 ல் 57 குழி குணசேகரனுக்கு விற்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என்னை கட்டுப்படுத்தாது. புல எண் 182/1 ல் 1 ஏக்கர் நிலமானது குணசேகரன் குடும்ப நலனுக்காக சாகுபடி செய்ததற்கு நஷ்ட ஈடாக கொடுக்கப்பட்டது என்றால் அது என்னை கட்டுப்படுத்தாது. குணசேகரனின் மகன்கள்தான் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரி. நிலங்களை பற்றிய முந்தைய விபரங்கள்

எனக்கு தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. என் அப்பாவிற்கு நன்கு தெரியும். இந்த வழக்கில் என் தந்தையார் சத்தியநாராயணனை என்தரப்பு சாட்சியாக நான் விசாரிக்க உள்ளேன். குணசேகரனுக்கு தாவா நிலங்களில் மேலே குறிப்பிட்ட விஸ்தீரணமுடையவற்றை அவர் தொடர்ச்சியாகவும் காலவரைக்கு உட்பட்ட காலத்திற்கு மேலாகவும் தனக்கு சொந்தமென்ற முறையில் அனுபவித்து வந்து அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான 4, 5 பிரதிவாதிகள் தற்சமயம் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது என்னை கட்டுப்படுத்தாது. நானோ, என் தந்தையாரோ காலவரைக்குட்பட்ட காலத்திற்குள் மேலே சொல்லப்பட்ட தாவா சொத்துக்களை அனுபவித்தது கிடையாது என சொன்னால் சரி. 4, 5 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் தவறு. என் தந்தையார் செல்வாக்கில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் சட்டப்படி நடந்தது. சட்டப்படி பட்டா மாற்றப்பட்டிருந்தாலும் அது எந்தவிதமான Title உரிமையையும் எனக்கு கொடுக்காது என்றால் தவறு. வெங்கடகிருஷ்ணனுக்கு 5 மகள்களும் ஒரே மகனான என் தந்தையார் சத்தியநாராயணனும் என்றால் சரி. வெங்கடகிருஷ்ணன் 2008 ம் ஆண்டு காலமானார். வெங்கடகிருஷ்ணன் காலமான

2008 ம் ஆண்டிற்கு முன்பாக இந்து குடும்ப பூர்வீக சொத்தில் பெண்களுக்கும் பாகம் உண்டு என்ற சட்டம் 39/2005 ன்படி உரிமை வந்து விட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வகையிலும் என் பிராது பிழையுடையது என்றால் தவறு. வா.சா.ஆ.5 வெங்கலெட்சுமி, அய்யாரு என்பவருக்கு எழுதிக்கொடுத்த பதிவு நகல் என்றால் சரி. வெங்கலெட்சுமி வா.சா.ஆ.6 எழுதி வைத்த மறு மாசமே இறந்து விட்டார் என்றால் சரி. அதனால் வெங்கலெட்சுமி நல்ல மனநிலை, திட சிந்தனையுடன் சொத்தை யாருக்கு எழுதி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையிலோ உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்பதை நிரூபிக்க எந்த சாட்சியும் முன்னிலைப் படுத்தவில்லை எனவும் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை எனவும் சொன்னால் தவறு. அவசரமாக தயார் செய்யப்பட்ட ஆவணங்களை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ஆவணம் லலிதாவால் 1ம் பிரதிவாதி ஹரிஹர வெங்கட்ராமனுக்கு எழுதி வைத்ததான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.8 செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரினேனா என்றால் இல்லை. அந்த வகையிலும் வழக்கு செல்லாது என்றால் தவறு. 04.10.2020 ல் லலிதா இறந்து விட்டார். நான் 08.12.2019 ல் இளவல் நிலையை கடந்து மேஜராகி விட்டேன். நான் இளவல் நிலையை கடந்தவுடன் லலிதாவிடம் சொத்தை

பொறுத்து அவர் கிரயம் செய்தது சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபனை எழுப்பினேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ல் தாவா சொத்துக்களுக்கான உரிமையாளராக வெங்கடேச அய்யர் பெயர்தான் உள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.11 ல் அடங்கல் நகலில் தாவா சொத்துக்களுக்கு சம்மந்தமில்லாதவர்கள் உரிமையாளராக காட்டப்பட்டிருப்பதால் இந்த வழக்கில் எவ்வித தொடர்புமில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை, என் தந்தையாரைதான் கேட்க வேண்டும். வா.சா.ஆ.12, 1374 பசலிக்கு உட்பட்டது. அதற்கு சரியான ஆங்கில வருடம் 1964-1965 என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.13 எந்த நிலத்திற்காக வெங்கலெட்சுமி பெயரில் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 பட்டா மாற்று உத்தரவு என் தந்தையாரின் செல்வாக்கால் வாங்கப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.15 எனக்கு என் அத்தை லீலாவதி எழுதி கொடுத்த விடுதலை பத்திரமாகும். லீலாவதி தற்போது உயிருடன் உள்ளார். வா.சா.ஆ.15 என் தந்தையாரின் நிர்ப்பந்தத்தின் பேரில் லீலாவதியிடம் எழுதி வாங்கப்பட்டது எனவும் வழக்கு தாக்கல் செய்வதற்காக இந்த ஆவணம் உருவாக்கப்பட்டது எனவும் சொன்னால் தவறு. வா.சா.ஆ.17 என் தாத்தா வெங்கடகிருஷ்ண அய்யருக்கு என் அத்தை எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் என்றால் சரி. வா.சா.ஆ.17 ல் எந்த இடத்திலாவது ஆயுள் பிரியந்தம் தனக்கு உரிமையுடையதாக லலிதா குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

வா.சா.ஆ.18 ரத்து பத்திரம் லலிதா எழுதியதை தாக்கல் செய்துள்ளேன். அதில் ஆயுள் பிரியந்தம் என்ற வார்த்தை குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. தஞ்சாவூர் விடுமுறை கால நீதிமன்றத்தில் அ.வ.எண் 9/1981 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அ.வ.எண் 383/1981 என்ற வழக்கானது என்றால் சரி. நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. என்அப்பாவுடன் கூட பிறந்த 5 சகோதரிகளையும் இந்த வழக்கில் தேவையான தரப்பினராக நான் சேர்த்திருக்க வேண்டும் எனவும் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.09.03 15:40:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.